மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் தை மாதம் 18–ம் நாள்
2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01–ம் நாள் வியாழக் கிழமை

<u>IA 6/2023/in/IA 3/2023/in/ OS 10/2023</u>

1. M. கண்ணன்
2. M. ஜெகதீசன் :: மனுதார்கள்/1, 2 எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

1. A. மனோகரன்
2. M. கார்த்திக் :: 1, 2 எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

3. மாவட்ட பதிவாளர், தேனி மாவட்ட பத்திரப்பதிவுத்துறை பெரியகுளம்.
4. தேனி மாவட்ட ஆட்சியர், தேனி. :: 3, 4 எதிர்மனுதார்கள் / 3, 4 பிரதிவாதிகள்.

--------

இம்மனுவானது 23–01–2024–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சின்னத்துரை , M.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், 1. 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சின்னத்துரை, M.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதார்கள் / 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 20–04–2023–ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:07 +0530

**உத்தரவு**

மனுவில் கண்ட 28-09-2006-ம் தேதிய பதிவில்லாத ஒத்த்திப்பத்திரம், 28-06-2022-ம் தேதிய பதிவில்லாத ஒத்திப்பத்திரம் மற்றும் 30-05-2010-ம் தேதிய பதிவில்லாத உறுதிமொழிப் பத்திரம் ஆகிய ஆவணங்களுக்குரிய அபராத முத்திரைக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டி Section 17 r/w 49 of Registration Act-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர்கள் / 1, 2 எதிர்மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:

அசல் வழக்கானது எதிர்மனுதார் / வாதிகளால் வழக்குரைச் சொத்து வாதிகளின் சுவாதீனத்தில் இருப்பதுபோல் காண்பித்து நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரியுள்ளனர். 1, 2 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையில் வழக்குரைச் சொத்தை கடந்த 28-09-2006-ம் தேதியிலேயே சுப்புராஜ் என்பவருக்கு ஒத்தி சுவாதீனத்தில் விட்டுள்ள விபரத்தையும், அதற்காக சுப்புராஜுக்கு கடந்த 28-09-2006-ம் தேதியில் சுப்புராஜ் என்பவருக்கு ஒத்தி சுவாதீனத்தில் விட்டுள்ள விபரத்தையும், அதற்காக சுப்புராஜுக்கு கடந்த 28-09-2006-ம்தேதி 1, 2 பிரதிவாதிகள் மற்றும் பாபுராஜன், 1, 2 பிரதிவாதிகளின் தாயாரான ராஜலட்சுமி அவர்களும் சேர்ந்து பதிவில்லாத ஒத்திப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதையும், அதன்பின்பும் கடந்த 28-06-2022-ம் தேதி வழக்குரை சொத்தைப் பொறுத்து மீண்டும் 5 வருடங்களுக்கு சுப்புராஜுக்கே 1-ம் பிரதிவாதியும், பாபுராஜனும் சேர்ந்து பதிவில்லாத ஒத்திப்பத்திரம் எழுதிக்கொடுத்து இதுநாள்வரை சுப்புராஜின் ஒத்தி சுவாதீனத்தில் இருந்து வருகிறது. வழக்குரைச் சொத்து பொதுக்குடும்ப சொத்தாக இருந்ததால் தான் பாபுராஜனின் கடனை அடைப்பதற்காக வழக்குரைச் சொத்தை அடமானமாக வைத்து கடன் பெறுவதற்காக 1, 2 பிரதிவாதிகளும், அவர்களின் சகோதரி செல்வியும், அவர்களின் சகோதரர் பாபுராஜனும் சேர்ந்து வீட்டைப் பொறுத்து நான்கு பங்காகவும், தாவா சொத்தான 2 ஏக்கர் மற்றும் பூர்வீகச் சொத்தான 2 ஏக்கர் 24 செண்டு ஆக மொத்தம் 4 ஏக்கர் 24 செண்டை பொறுத்தும், அதிலுள்ள கிணற்றைப் பொறுத்தும் 1-ம் பிரதிவாதிக்கும், ஜெகதீசனுக்கும், பாபுராஜனுக்கும் மூன்று பங்காக காட்டி கடந்த 30-05-2020-ம்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:13 +0530

தேதி பதிவில்லாத உறுதிமொழிப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர. வழக்குரைச் சொத்திற்கான மூல ஆவணங்கள் பிரதிவாதிகளின் சம்மதத்தின்பேரில் 1, 2 பிரதிவாதிகளின் சகோதரர் பாபுராஜன் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்ததால் சொத்து சம்பந்தப்பட்ட மேற்கண்ட ஒத்தி மற்றும் உறுதிமொழி ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, வழக்குரை சொத்தின் சுவாதீனம் சுப்புராஜ் என்பவரின் ஒத்தி சுவாதீனத்தில் இருப்பதை நீதிமன்றத்திற்கு தெரியபடுத்தும் விதமாக மேற்கண்ட பதிவில்லாத ஆவணங்களுக்கு அபராத முத்திரைக் கட்டணம் செலுத்த அனுமதிவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1, 2 <u>எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>

அசல் வழக்கில் பாபுராஜன் தரப்பினர் அல்ல. தரப்பினரே இல்லாத ஒருவரின் கையெழுத்தை பதிவில்லாத ஆவணத்தின் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முற்படுவது ஏற்புடையதாக இல்லை. பதிவு செய்யப்படாத ஆவணங்களை முன்னிலைப்படுத்தி அபராத முத்திரைக் கட்டணம் செலுத்துவதாக கூறியிருப்பது ஏற்படையதல்ல. பதிவு செய்யப்படாத ஆவணங்களை Collateral Purpose–க்காக பயன்படுத்துவதாக இருந்தால் மட்டுமே அதனைப் பொறுத்து அபராத கட்டணம் செலுத்த ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று பல வழக்குகளில் கூறப்பட்டுள்ளது. மனுவில் கண்ட ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுக்களில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுஅனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

5) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6) <u>பிரச்னைக்கான தீர்வு:</u>

மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைச் சொத்து 28–09–2006–ம் தேதி மற்றும் 28–06–2022–ம் தேதிய பதிவில்லாத ஒத்திப்

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:19 +0530

பத்திரங்களின் அடிப்படையில் சுப்புராஜ் என்பவரின் ஒத்தி அனுபவத்தில் இருப்பதாகவும், தாவா சொத்தினைப் பொறுத்து 1-ம் பிரதிவாதிக்கும், ஜெகதீசனுக்கும், பாபுராஜனுக்கும் மூன்று பங்காக காட்டி கடந்த 30-05-2020-ம் தேதி பதிவில்லாத உறுதி மொழிப் பத்திரம் எழுதிக்கொண்டுள்ளதாகவும், எனவே , மேற்கண்ட பதிவில்லாத பத்திரங்களுக்கு அபராத முத்திரைக் கட்டணம் செலுத்த அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**7)** 1, 2 எதிர்மனுதார்கள் / வாதிகள் தரப்பில் பதிவு செய்யப்படாத ஆவணங்களை முன்னிலைப்படுத்தி அபராத முத்திரைக் கட்டணம் செலுத்துவதாக கூறியிருப்பது ஏற்படையதல்ல என்றும், பதிவு செய்யப்படாத ஆவணங்களை Collateral Purpose-க்காக பயன்படுத்துவதாக இருந்தால் மட்டுமே அதனைப் பொறுத்து அபராத கட்டணம் செலுத்த ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று பல வழக்குகளில் கூறப்பட்டுள்ளது என்றும், மனுவில் கண்ட ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியான உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் எனவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

**8)** இரு தரப்பு வாதம் பரிசீலனை செய்யப்பட்டதில் மனுதார்கள் முத்திரைக் கட்டணம் செலுத்த அனுமதி கோரும் ஆவணமானது இவ்வழக்கிற்கு எவ்வகையில் தொடர்புடைய ஆவணமாக உள்ளது என்பது பற்றி பரிசீலனை செய்ததில் இந்த வழக்கானது 1, 2 வாதிகள் தாவா 1, 2 இலக்கச் சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகளின் சகோதரரான பாபுராஜன் என்பவரிடம் தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில், 1, 2 பிரதிவாதிகள் , வாதிகளின் தாவா சொத்துக்களின் மீதான அனுபவத்திற்கு இடையூறு செய்வதால் , 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

**9)** இந்நிலையில் மனுதாரகள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் முத்திரைக் கட்டணம் செலுத்த அனுமதிகோரும் 28-09-2006-ம் தேதி மற்றும்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:34 +0530

28-06-2022-ம் தேதிய பதிவில்லாத ஒத்திப்பத்தரங்கள் மற்றும் 30-05-2020-ம் தேதிய உறுதிமொழிப் பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் தாவா சொத்தின் அனுபவம் சுப்புராஜ் என்பவர் வசம் இருந்து வருவதாக நிரூபிக்கத்தக்க வகையில் உள்ளது என்பதும், எனவே, தாவா சொத்தின் அனுபவத்தை பொறுத்து நிரூபணம் செய்யும் விதமாக மேற்படி ஆவணங்கள் சாட்சியமாக குறியீடு செய்யும் விதமாக மேற்படி ஆவணங்களுக்கு செலுத்தப்படவேண்டிய குறைவு பட்ட முத்திரை தீர்வையை செலுத்த அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. வாதிகள் வழக்குரைச் சொத்தை 1, 2 பிரதிவாதிகளின் சகோதரரான பாபுராஜன் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளதாக உள்ள நிலையில், தாவா சொத்தின் அனுபவம் 3-ம் நபர் ஒருவரான சுப்புராஜ் என்பவர் வசம் இருப்பதாக கூறி மேற்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய பிரதிவாதிகள் அனுமதி கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட ஆவணங்களானது ஒரு துணை நிலை (collateral purpose) ஆவணங்களாக உள்ளது என்பது தெரியவருகிறது.

**10)** இத்தகைய சூழ்நிலையில், பின்வரும் முன் தீர்ப்புகளை பரிசீலனை செய்ததில் (2010) 2 MadWN (Civil) 524 (2010) 3 MLJ 618 – S. Manikandan Moorthy *Vs* S. Krishnamoorthy என்ற வழக்கில் மேற்கோள் காட்டப்பட்ட Avinash Kumar Chauhan Vs Vijay Krishna Mishra (2009) 3 MLJ 409 (SC) என்ற வழக்கில் குறைவான முத்திரை தீர்வை கொண்ட ஒரு ஆவணத்தை பொறுத்து சாட்சியமாக அனுமதிக்க இயலுமா ? என்பது பற்றி கூறப்பட்டுள்ள நிலை நிறுத்தப்பட்ட சட்டக் கருத்து இவ்வழக்கிற்கு மிகவும் பொருந்துவதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** மேற்படி Avinash Kumar Chauhan Vs Vijay Krishna Mishra (2009) 3 MLJ 409 (SC) என்ற வழக்கில் கூறப்பட்டுள்ள நிலைநிறுத்தப்பட்ட சட்ட கருத்துரை பின்வருமாறு.

> “ 7. The Ration decidendi laid down by the Honourable Supreme Court is given below:
>
> “ I. Section 33 of the Stamp Act 1899 casts a statutory obligation onall the authorities to impound a document. The Court being an

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:42 +0530

Authority to receive a document in evidence is bound to give effect thereto.

II. Section 35 of the Stamp Act, 1899 categorically provides that an unstamped document shall not be admitted for any purpose whatsover. If all purposes for which the document is sought to be brought in evidence are excluded , there is no reason as to how the document would be admissible for collateral purposes.

III. There is no prohibition under section 49 of the Registration Act, 1908 to receive an unregistered document in evidence for collateral purpose. But, the document so tendered should be duly stamped or should comply with the requirement of Section 35 of the Stamp Act, if not stamped as a document cannot be received in evidence even for collateral purpose unless it is duly stamped or duty and penalty are paid under section 35 of the Stamp Act."

என்று கூறப்பட்டுள்ளது.

12) மேற்கண்ட சட்டக்கருத்தை பரிசீலனை செய்ததில் ஒரு ஆவணம் அந்த வழக்கில் கூறப்பட்டுள்ள பிரதான சங்கதிக்கு தீர்வு காணும் விதமாக இல்லாமல் துணை நிலை காரணங்களுக்கான சாட்சியமாக தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் அந்த ஆவணம் குறைவு பட்ட முத்திரைத் தீர்வை ஏற்பட்டதாக தெரியவரும் நிலையில், பிரிவு 35 Stamp Act-ன் படி குறைவு பட்ட முத்திரைக் கட்டணத்தை உரிய அபராதத்துடன் தரப்பினர் செலுத்தும் பட்சத்தில் பிரிவு 49 பதிவு சட்டத்தின் கீழ் மேற்படி ஆவணத்தை துணை நிலை காரணங்களுக்காக சாட்சியமாக அனுமதிக்கலாம் என்பதாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது தெரியவருகிறது.

13) இதற்கு மாறாக, குறைவான முத்திரைக் கட்டணம் பதிவு செய்யப்படாத ஒரு ஆவணம் எந்த ஒரு காரணத்திற்காகவும் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்று மாண்புமிகு துரை உயர் நீதிமன்ற கிளையில் Thangamuthu and others *Vs* A. JeyaraJ 2019-4-LW-602 என்ற வழக்கின் முன் தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஒரே கருத்தைப்

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:49 +0530

பொறுத்து மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பும், மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக தெரிய வரும் பட்சத்தில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் கருத்தினை கருத்தில் கொள்ள வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** இந்த வழக்கில் மனுதார்கள் குறைவுபட்ட தீர்வை செலுத்த அனுமதி கோரும் ஆவணங்களானது மேற்கண்ட பரிசீலனையின் படி வழக்கு சொத்தைப் பொறுத்த உரிமை மூலத்தை தீர்வு காணும்படியான ஆவணங்களாக இல்லாமல் வழக்கு சொத்து தற்போது 3-ம் நபரின் ஒத்தி அனுபவத்தில் பிரதிவாதியால் ஒப்படைக்கப்பட்டுள்ளதை காட்டத்தக்க ஆவணமாக உள்ளது என்பது தெரியவருகிறது. வாதி வழக்கை தாவா சொத்தின் அனுபவம் தன் கைவசம் இருப்பதாக கூறி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் வாதி கூறுவது போன்று தாவா சொத்தின் அனுபவம் வாதியின் வசம் இலலை என்பதை காட்டும் விதமாகவும் தாவா சொத்து பிரதிவாதியால் 3-ம் நபருக்கு ஒத்தி அனுபவமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை காட்டும் விதமாகவும் மேற்கண்ட ஆவணங்கள் இவ்வழக்கில் சாட்சியமாக தாக்கல் செய்யும் பொருட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

**15)** எனவே, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் பிரதிவாதி தரப்பில் ஒரு துணை நிலை காரணங்களுக்காக தாக்கல் செய்யப்படும் ஆவணங்களாக உள்ளது என்பது தெரியவருகிற நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற Avinash Kumar Chauhan Vs Vijay Krishna Mishra (2009) 3 MLJ 409 (SC) என்ற வழக்கில் கூறப்பட்டுள்ள சட்ட கருத்தின்படி இவ்வழக்கில் மனுதார்கள் முத்திரை தீர்வை செலுத்த அனுமதிக்க கோரும் ஆவணங்களானது துணை நிலை காரணங்ளுக்காக சாட்சியமாக

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:02:56 +0530

பிரிவு 49 பதிவுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்க ஏதுவாக பிரிவு 35 Stamp Act-ன் படி மேற்படி ஆவணங்களுக்கான குறைவுபட்ட முத்திரை தீர்வையை உரிய அபராதத்துடன் செலுத்த அனுமதி கோரும் இந்த மனுவானது அனுமதிக்கத்தக்கதாக உள்ளது என்று முடிவு செய்து அவ்வாறே மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**16)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 6 / 2023 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 01-02-2024-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:03:05 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

District Munsif Court,
Uthamapalayam.
I.A. 6/2023/in/IA 3/2023/in/
OS 10/2023
FAIR / DRAFT ORDER
Date : 01-02-2024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் தை மாதம் 18–ம் நாள்
2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01–ம் நாள் வியாழக் கிழமை

**IA 6/2023/in/IA 3/2023/in/ OS 10/2023**

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சீப்பாலக்கோட்டை கிராமம், 1–வது வார்டு, ராஜா தெரு , கதவு எண்.56–ல் வசிக்கும் லேட்.M.முத்துகிருஷ்ணன் அவர்கள் மகன் இந்து சுமார் 43 வயதுள்ள M. கண்ணன். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சீப்பாலக்கோட்டை கிராமம், 1–வது வார்டு, ராஜா தெரு , கதவு எண்.56–ல் வசிக்கும் லேட்.M.முத்துகிருஷ்ணன் அவர்கள் மகன் இந்து சுமார் 46 வயதுள்ள M. ஜெகதீசன். |

.... மனுதார்கள் / 1, 2 எதிர்மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள்

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சீப்பாலக்கோட்டை கிராமம், வார்டு–2, கதவு எண்.99, அம்பிகை அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் K.அழகுரெங்கசாமி அவர்கள் மகன் இந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் சுமார் 63 வயதுள்ள A. மனோகரன். |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, சீப்பாலக்கோட்டை கிராமம், வார்டு–2, கதவு எண்.99, அம்பிகை அம்மன் கோவில் தெருவில் வசிக்கும் A. மனோகரன் அவர்கள் மகன் இந்து சுமார் 32 வயதுள்ள M. கார்த்திக். |

.... 1, 2 எதிர்மனுதார்கள் / வாதிகள்

| | |
|---|---|
| 1 | தேனி மாவட்டம் , பெரியகுளம் தாலுகா, பெரியகுளம் பத்திரப்பதிவுத்துறை அலுவலகம், அதன் தேனி மாவட்ட பதிவாளர் அவர்கள். |
| 2 | தேனி மாவட்டம் , தேனி தாலுகா, தேனி டவுன், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கும் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் |

.... 3, 4 எதிர்மனுதார்கள் / 3, 4 பிரதிவாதிகள்

மனுவில் கண்ட 28–09–2006–ம் தேதிய பதிவில்லாத ஒத்த்திப்பத்திரம், 28–06–2022–ம் தேதிய பதிவில்லாத ஒத்திப்பத்திரம் மற்றும் 30–05–2010–ம் தேதிய பதிவில்லாத உறுதிமொழிப் பத்திரம் ஆகிய ஆவணங்களுக்குரிய அபராத முத்திரைக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டி Section 17 r/w 49 of Registration Act–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:03:12 +0530

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 13-10-2023 |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | ரூ.20/- செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 23-01-2024-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சின்னத்துரை , M.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், 1. 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சின்னத்துரை, M.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதார்கள் / 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 20-04-2023-ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

## <u>நிறைவேற்றாணை</u>

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 6 / 2023 அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2 | செலவுத் தொகை இல்லை. |

**<u>செலவுத் தொகை இல்லை</u>**

2024-ம் வருடம் பிப்ரவரி மாதம் 01-ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2024.02.01 16:03:22 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

District Munsif Court,
Uthamapalayam.
I.A. 6/2023/in/IA 3/2023/in/
OS 10/2023
EX ORDER
Date : 01-02-2024